Strike by Students of Alagappa College

* 317. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the B.A. class Tamil students of Alagappa College at Karaikudi, staged a strike from 3rd August 1968 demanding that English should be their medium of instruction ?

அழகப்பா கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

திரு. என். ஆர். தியாகராஜன் ; மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

காரைக்குடி அழகப்பா கல்லூரி பி.ஏ. வகுப்பு தமிழ் மாணவர்கள் தங்களுக்கு ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென கோரி 1968 ஆகஸ்டு 3-ஆம் தேதிமுதல் வேலை நிறுத்தம் செய்தனரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

Salem Steel Plant

* 318. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any talks were held with Thiru R. Venkataraman, Member of the Planning Commission, regarding Salem Steel Plant; and

(b) the details thereof ?

சேலம் உருக்காலைத் திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சேலம் உருக்காலை திட்டம் பற்றித் திட்டக் கமிஷன் அங்கத்தினர் திரு. ஆர். வெங்கிட்டராமன் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடந்ததா ?

(இ) விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்· (அ) திட்டக் குழுவுடன் இது பற்றி விவாதிக்கப்பட்டது.

(இ) கஞ்சமலை இரும்புக் கனி வளத்தை வெளிக்கொணர்ந்து அமைக்க திட்டக் குழு இசைவு தந்துள்ளது.

திரு. என். சுந்தரேச தேவர் : சேலத்தில் கிடைக்கும் இரும்பு உருக்காலைக்கு பயன்படாது என்பதைப் போன்ற வதந்திகள் வருகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வதந்திகளை நாம் நம்பக்கூடாது. அதுவும் சட்டமன்ற உறுப்பினர்கள் நம்பக்கூடாது. சேலம் இரும்பை உருக்காலைக்குப் பயன்படுத்தலாம் என்றுதான் இன்றைக்கும் நம்புகிறோம்.

Elementary Grade Teachers

* 319. Q.—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the number of Elementary Grade Teachers of this State, promoted as Secondary Grade Teachers as on 1—1—1969 in observance of the Government's plan to promote all Elementary Grade Teachers to Secondary Grade ?

எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் அனைவரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்த்தப்பட வேண்டும் என்ற அரசு திட்டப்படி இதுவரை இம்மாநிலத்தில் பதவி உயர்த்தப்பட்ட எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களின் எண்ணிக்கை 1—1—1969 அன்றுள்ளவாறு எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 6,500.

Teachers' Welfare Fund

* 320. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the requisition of Elementary School Teachers that the Teachers' Welfare Fund should be allotted 'Educational District-wise' so as to enable immediate assistance; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) அரசு அக்கோரிக்கையை ஏற்கவில்லை.

Technical Training School at Srivilliputhur

* 321. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to establish a Technical Training School at Srivilliputhur during the Fourth Five-Year Plan ?

ஸ்ரீவில்லிபுத்தூருக்கு தொழிற் பயிற்சிப் பள்ளி

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Handwriting of students

* 322. *Q.*—THIRU SAW GANESAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the steps taken by the Government to improve the handwriting of the students in schools and colleges ?

மாணவர்களின் கையெழுத்து

திரு. சா. கணேசன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

பள்ளி கல்லூரிகளில் மாணவர்களின் கையெழுத்து திருத்தமாய் அமைய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது ?